ஆசைத்தம்பியின்

முத்துக்குவியல்



ஆசைத்தம்பியின்

முத்துக்குவியல்

தொகுத்தவர் : பழம்நீ

விலை: 3 அணு

பதிப்பாளர்:

எம். சூரி

14-ஏ, குப்பையர் தெரு

சென்னை-1

கலைபகம் வெளியீடு—24
முதற்பதிப்பு—மார்ச்—1951

அச்சிட்டது :—முத்துக்குமரன் அச்சகம்,
14-ஏ, குப்பையர் தெரு, சென்னை-1 (15-3-'51)

ஆசைத்தம்பியின்

முத்துக் குவியல்

கண்பேசினால்...?

முதலில் தோன்றியது விழியா? மொழியா?
விழிதான்.
விழிக்கும் மொழிக்கும் உள்ள வேற்றுமை?
விழி ஒளியால் இயங்கும்! மொழி ஒலியால் இயங்கும்
இரண்டையும் வெளியில் பரப்புவது எவை?
கண்ணும், வாயும்.
வாய் பேசினால் அதைக்கேட்பது எது?
காது.
ஆனால் கண்பேசினால் அதைக்கேட்பது?
கண்தான்.

காதலர்களுக்குள்...?

காதலரே! நீங்கள் வந்து வெகுநேரமாகிவிட்டதோ! காத்துக்கிடப்பது காதலின் கடமைதானே? நேற்றுப்பார்வையில்தானே காதல் உதயமாயிற்று? நேற்றானால் என்ன, இன்றானால் என்ன! காதல் பழங்கஞ்சியல்ல ஆறிவிட; அது எப்போதும் மாற்றுக்குறையாத பசும்பொன் ஆம்! வீசும் தென்றலிலே காதல் பேசும் நிலாவின் ஒளியிலே உள்ளம் உருகும்.

வீரத்தமிழருக்கு...!

தோழர்களே! இளைஞர்களே!

தமிழ்நாடு தத்தளிக்கிறது! தலைநிமிர்ந்திருந்த தமிழகம் தாசர் நாடாகிவிட்டது! ஏமாந்த காலத்திலே ஏற்றம் கொண்டனர் எதிரிகள்! நம்மை எல்லாம் எலிகளென எண்ணிவிட்டனர்! புல்லளவும் மதிப்பதில்லை! புலிவேஷம் போடுகின்றனர்! நாம் எல்லாம் எலிகளல்ல புலிகள்

மாந்தர் என்பதை நிரூபிக்க வேண்டும்! கொடியோர் செயல் அறவே ஒழிப்போம்! நம் தமிழர் ஆட்சியை மீண்டும் நிறுவ அல்லல்கள் வரினும் ஏற்போம்! ஊனுடல் சேட்பினும் செந்தமிழ் நாட்டிற்கு உவப்புடன் சேர்ப்போம்!

என் தாயின்மீது ஆணை, தந்தைமீது ஆணை, தமிழகத்தின்மீது ஆணை, தோழர்களே, தமிழைப்பழிப்பவனை, தாய்நாட்டுச் சுதந்திரத்தைப் பறிப்பவனை, தாய்தடுத்தாலும் விடேன்! விடேன்! என்று வீறிட்டெழுங்கள்! வீழ்த்துங்கள் வீணர் ஆட்சியை! எழுச்சி ஏற்படட்டும்! புரட்சி பூக்கட்டும்! மரமண்டைகள் மாளட்டும்! மானமிழந்த தமிழகம் மறுமலர்ச்சி பெறட்டும்.

காதல்...?

கண்களின் சந்திப்பில் சிக்கிய யாருமே தப்பமுடியாது. இருவர் விழிகளால் இருவர் உள்ளமும் ஒன்றாகும். அந்தஇருவர் உள்ளங்களின் புணர்ச்சியில் உதயமாவதுதான் காதல்.

பைத்தியமும்—துக்கமும் :—

ஒன்றின்மீது மனதை லயிக்க விட்டு மற்ற எல்லாவற்றையும் மறப்பதற்குப் பெயர் பைத்தியம்! மனதை எதிலுமே லயிக்கவிடாமல் எல்லாவற்றையும் மறப்பதற்குப் பெயர் துக்கம்! பைத்தியமும் துக்கமும் ஒன்று சேராத நேர்கோடுகள்! இரண்டிற்கும் இவ்வளவு ஒற்றுமை இருந்தும் பைத்தியக்கார உலகம் துக்கத்தை வரவேற்கிறது! பைத்தியத்தை வெறுக்கிறது.

காதல் கடைத்தெருச் சரக்கல்ல! காதல் சிலவேளைகளில் சிலருக்கு பயங்கரமானதாக இருக்கும். ஆனால் அதற்காகப் பயப்படுவதா? அம்பிகாபதியும் அமராவதியும் அழியாத காதற் களஞ்சியங்கள், அவர்கள் முடிவு சாதல் என்றாலும் அவர்கள் காதலின் சாதலில் நிரம்ப மகிழ்ச்சியிருந்தது. உண்மைக் காதலர்கள் எதற்குமே அஞ்சக்கூடாது.

பருவமங்கை :—

பெரியமனுஷி-அர்த்தமென்ன? மண்ணிலே முளைத்த பருத்திச்செடி, பூத்து, காய்த்து, பஞ்சுவைத்து பஞ்சைப் பிரித்து, பதப்படுத்தி, நூலாக்கி, பின் சேலையாக்கி விலைக்கனுப்பும் நிலையைப்போலத் தானே பெரிய மனுஷி என்பது! சேலைவிலையாவது போல் பெரிய மனுஷி ஆன பின்பு பெண்களும் விலையாகிறார்கள். இதுதானே கலியாணம்?

பிரிவினை :—

ஆளுக்கொரு வீடு அல்ல, குடும்பத்திற்கு ஒரு வீடு போல, இனத்திற்கு ஒரு நாடு தேவை—என்று சொந்த நாட்டை கேட்கிறது திராவிடர் கழகம்.

வீட்டுக்கொரு கதவு தேவைப்படுவதுபோல, தன் நாட்டுக்கொரு தடுப்பு தேவை. வீட்டின் திறவுகோல் வீட்டுக் காரனிடம் இருப்பதை, இருக்க வேண்டியதைப் போல, திராவிட நாட்டின் ஆட்சி, அதிகாரம் ஆதிக்கம் ஆகிய அனைத்தும் திராவிடர்களின் கையிலே இருக்கவே திராவிடர் கழகம் பிரிவினைகேட்கிறது.

பரிசு...!

சீர்திருத்தவாதிகளுக்குச் சிறை! சித்திரவதை! சிரச்சேதம்! நல்லவர்களுக்கு நஞ்சு! நாடு கடத்தல்! திருத்தம் தேவை என்றோர்களுக்கு, தீயிலிடுதல்! இவைகளே பழங்காலத்தில் பகுத்தறிவாளிகளுக்குகிடைத்த பரிசுகள்!

சூழ்நிலை :—

மனிதர்களைப் பாழ்படுத்துவது சூழ்நிலைதான். ஆண் பெண் கெடுவது அவரவர்கள் குற்றமல்ல, சூழ்நிலையின்

குற்றந்தான்! தங்கமான மனிதரும் தவறிவிழுவதைக் காண்கிறோம். அது அவர் குற்றமா? பாசி படர்ந்துள்ள இடத்திலே பச்சைக் குழந்தை நடந்தாலும் சரி, பயில்வான் நடந்தாலும் சரி, பல் உடையத்தான் செய்யும். என்ன சக்தி இருந்தாலும் அங்கு சாயாது. அதைப்போலத்தான் எவ்வளவு யோக்கியமான மனிதனும் இருந்தாலும் சூழ் நிலை மோசமாகும் போது கீழ்த்தரமான செய்கைகளில் இறங்கி விடுகிறான்.

காதலை வளர்ப்பது :—

காதல் பயிரை வளர்க்கும் தண்ணீர் தனிமைதான்! காதலில் சிக்கிய ஒரு ஆணுக்கோ அல்லது பெண்ணுக்கோ 'தனிமை' மட்டும் கிடைத்தால், இனிமையான கனவுகள் கற்பனையிலே கட்டப்படும். அந்தக்கனவுகளை நனவாக்க நல்லதொரு பாதைக்காக மூளை வேலை செய்யும். ஆனால் அப்போது வேதனையும் இருக்கும்! "காணமாட்டோமா?" இது கண்களின் கவலை! "பேசமாட்டோமா?" இது வாய்க்கு உள்ள வருத்தம்! "தழுவமாட்டோமா?"—இந்த ஊசலாடல் உடலுக்கு! "கல்யாணம்நடக்காதா?" இந்தக் கனி கருத்துக்கு!

காதல் உள்ளம் :—

காதல் உள்ளத்தோடு சினிமா பார்த்தால் சிரித்து உருவமெல்லாம் சிந்தனையைக்கிளறும், கதையைப்படித்தால் அந்தக் கற்பனையிலே நாம் இருப்போம்; சங்கீதம் சஞ்சலத்தைத்தருமே தவிர, சாந்தியைத் தராது; ஆறுதலுக்கு அன்பின் பொருளைக்காண அகம் துடிக்கும்! மோகத்தின்வேகம் உச்சி நிலைக்குவரும். எந்த மருந்தாலும் காதல் நோயைக் கட்டுப்படுத்த முடியாது. விருப்பம் நிறைவேறுவதைத் தவிர, சுருக்கமாகச் சொன்னால் காதல் உள்ளம் கடலைப்போன்றது. அதில் உள்ள அலைகளுக்கு அமைதி ஏது?

விளக்கோடு விளையாடலாமா?

அழகும் அன்பும்தான் காதலின் பெற்றோர்கள்! காதலைக் கவர்வது அழகு, கருத்தோடு இருத்துவது அன்பு! ஆயுதத்தின் துணைகொண்டு அகிலத்தையே அடக்கி ஆண்டிருக்கின்றது, ஆடவர் கூட்டம்! ஆனால், ஆண்கள் கூட்டத்தையே ஆரணங்குகள் அடிமைப்படுத்தியிருக்கின்றனர், அழகின் துணைகொண்டு! அழகுக்கு இருக்கும் அற்புத சக்தி உலகில் வேறு எதற்கும் கிடையாது. அழகைக் கண்டதும் ஆனந்தம் பிறக்கலாம் அகத்தில்! ஆனால் அந்த ஆனந்தம் ஆபத்தின் ஆரம்ப எல்லை! அழகு கொழுந்து விட்டெரியும் ஒரு விளக்கு! விளக்கோடு விளையாடுவது ஆபத்துத்தான்! ஆனால், விட்டில் விளக்கில் விழாமலா இருக்கிறது? மனிதர்களும் அப்படித்தான்!

முதல் இரவு :—

என் க் கண்டதும் எழுந்து வந்து என்னை வரவேற்றார். "கண்ணே" என்றார். ஆகா, அதில்தான் என்ன ஆனந்தம்! அன்று சந்திரன் எங்களுக்காக எவ்வளவோ பிரகாசமாகத்தான் கதிர்களை எங்கள்மேல் தெளித்தான். பூஞ்செடிகள் சில சேர்ந்து கொண்டு, "எங்களைப் பஞ்சணையாக்கிக்கொள்ளுங்கள்' என்று எங்களைக்கெஞ்சின. எங்கள் உள்ளத்துடிப்பை அறிந்த விடிவெள்ளி, 'உங்களுக்காகவே விரைவில் உதிக்காமல் இருக்கிறேன். உல்லாசமாக இருங்கள்' என்று எங்களை ஆசிர்வதித்தது. ஆம், எங்கள் இல்லறவாழ்க்கையின் ஆரம்ப நாள் அது அகிலத்தையும் மறந்தமுதல் இரவு அது.

எரிமலை :—

சே! 'காமத்திற்குக் கண் இல்லை' என்பது என் வரையில் சரியாயிற்றே! அறிவைமறைத்து விட்டது ஆசை! சிந்தனையைச்சிதைத்துவிட்டதுசிற்றின்ப எண்ணம்!மதிப்பைக் கெடுத்துவிட்டது மன்மதலீலை மேலிருந்த மனமயக்கம். மனிதத்தன்மையையே மாற்றி விட்டது மோகம்! வீணாக்கிவிட்டது! விரகதாபம்! காமம் காட்டாறு அல்ல; அதை அணைபோட்டுத்தடுக்க! அது ஓர் பயங்கர எரிமலை.

முத்தத்தின்மர்மம் :—

மெல்லியதேன் காற்றிலே மிதந்து வருகிற வண்டு நான். வண்ணமலர் உன்னைக்கண்டுவிட்டேன். உன் உதட்டில் ஊறுகின்ற அமுதத்தை அள்ளிப்பருக அனலாய் உருகுது என் நெஞ்சம் 'அன்பே! அணைப்பின் சுகத்தை நீ அறிய மாட்டாய். முத்தத்தின் மகத்துவம் உனக்குத் தெரியவே தெரியாது. முத்தம் சாதாரணமானதல்ல! முத்தம், இதழ்களின் இன்பஇணைப்பு' உதடுகளின்உரிமைப்போர். எச்சில் நிறைந்த வாயிலேதான் அது இச் என்று பிறக்கிறது. ஆனால் அந்த இச்சிலே தான் ஈருயிர் ஓரோயிராகும் மூச்சுக் கலப்பு ஏற்படுகிறது.

திருமணத்துக்குமுன் :—

திருமணகாலங்களில் பெண்களின் எண்ணங்களை கேட்கிறார்களா? அல்லது பெண்கள் தங்கள் எண்ணங்களை வெளியிட அனுமதிக்கிறார்களா? "நான் இவனை நேசிக்கிறேன்" என்று ஒரு பெண் கூறினால் தூஷிப்பு தானே எங்களுக்கு? பெண்ணின் எண்ணத்தை அறியாத கணவன், மாலையையும் மஞ்சள் கயிற்றையும் கழுத்தில் மாட்டலாமேதவிர கருத்தில் மாட்டமுடியுமா? பெண்ணின் மனதை அறியாமல் மாலையிட்டு தாலிகட்டிய மாப்பிள்ளைக்கு, அவன் கட்டிய தாலிக்காக நாங்கள் மனைவி என்றால், தாலியைச் செய்து கொடுத்த தொழிலாளிக்கும் நாங்கள் மனைவியாக முடியுமா? வேலிபோட்ட தொழிலாளி தோட்டத்து சொந்தக்காரனாக முடியுமா?

காதல்—விளையாட்டு :—

நானும் அவரும் நந்தவனம் போவோம். அங்குநான் ஓடுவேன்; அவர் துரத்துவார். தடுக்கி விழுவதுபோல் விழுவேன்; அவரும் என்மேல் விழுவார்; என் கண்ணின் மணியே! என்இதயத்தின் நாதமே என்று என்னைக் கட்டி அணைப்பார். அவரும் என்மேல் விழுவார்; என் கண்ணின் மணியே! என் இயத்தின் நாதமே என்று என்னைக் கட்டி அணைப்பார். 'ஆ' என்று சப்தம் போடுவேன். 'அடி பலமா? —என்று அன்பு ததும்பக்கேட்பார்; அழகு

முகத்தை சுழிப்பேன். பூச்செண்டு பூமியிலே கிடப்பதா என்று சொல்லி கேலிமொழி சொல்லிக் கொண்டே என்னைத் தூக்குவார்; நான் அவர் கழுத்தை கொடிபோல் கட்டிக்கொள்வேன்; கன்னத்தை காட்டு என்பார்; கன்னிப்போகும் 'ஊஹும்'—என்பேன்; கட்டிப்பிடித்து பிடிவாதம் செய்வார், தட்டிக்கழிக்க தாகமாய் இருக்கிறதென்பேன்; இந்தா என்று இதழ் நீரை என் உதட்டில் இறைப்பார்; விளையாட்டுபோதும், களைத்துப்போய் விட்டீர்கள்—இதோபழம் சாப்பிடுங்கள் என்று கூறி, பக்கத்து மரத்தில் பழம் பறித்துக்கொடுப்பேன்; இப்பழம் புளிக்கும் பனம் பழம் இருந்தால் கொடு என்பார்; கண்ணை மூடிக்கொள்ளுங்கள் என்பேன்; என்னை ஏய்க்கவாபார்க்கிறாய் என்பார்; இல்லை என்று சொல்லி மீண்டும் ஓடுவேன்; வண்டுபோல் துரத்துவார்.

அரண்மனைக்கு வருவேன், அவரும் அயரமாட்டார்; அந்தப்புரம் வருவேன்; மலர் மஞ்சத்தில் படுப்பேன்; வாடை அறிந்து வண்டும் வரும்; அருகில் அமரும், அவசரப்படாமல் தேனைப்பருகும். களிப்பு வெள்ளத்தில் கண்ணைமூடும்; அப்புறம் "இன்பம்" கொள்ளையோ கொள்ளை எனக்கூவும்; அதை இருவரும் கேட்போம்.

அன்பழகன் ஆட்சியில்......?

——இது முடியரசல்ல! குடியரசுதான்; பெயரளவுக்கே மன்னர்! ஆளப்போவது நீங்கள்தான். இனி இங்கு ஜாதி இருக்காது; பிறப்பொக்கும் எல்லா உயிரும்' என்ற நீதி இருக்கும். சர்வாதிகாரம் இருக்காது; 'தனிமனிதன் உடமைக்கு இவ்வுலகம் உண்டெனில் அவ்வுலகம் அழியட்டும்,—என்ற அமைப்பு இருக்கும். குலம் ஒன்றுதான்; கடவுளும் அப்படியே! கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப்போகும். இவைகளே இன்றிலிருந்து அமையப்போகும் ஆட்சி. அதுவே அன்பழகன் ஆட்சி. அதற்கு உங்கள் ஆதரவு, ஒத்துழைப்புதேவை.

பெண்ணின் பெருமை :—

பெண்மணிகளைப் பற்றிக் கீழ்மைத்தனமாகப் பேசவோ எழுதவோ—எந்த ஆணுக்கும் உண்மையிலேயே உரிமையோ, உற்றதகுதியோ கிடையாது. ஏனெனில் ஆண்களை ஆக்கியவர்கள் பெண்கள்! ஆண்களை ஆசீர்வதிப்பவர்கள் பெண்கள், தாய்மையின் இருப்பிடம் பெண்மை. இவைகளை அறியாமல் பேசுவோர் பெண்ணின பெருமை அறியாதார்.

விஷப்பல் :—

பகுத்தறிவு என்ற வேர் கையில் இருக்கும்போது, படமெடுத்தாடும் பாம்பாயிருந்தாலும் அடங்கி ஒடுங்கத் தானே செய்யும்? என்ன இருந்தாலும் விஷப்பல் இருக்கிறவரை பாம்பைக்கண்டு பயப்படாமல் இருக்கமுடியாது.

நகைச்சுவை :—

எனக்குக் கல்யாணமான பத்தாவது மாதத்தில் ஒரு ஆண் குழந்தைக்கு நான் தாயானேன். பெரிய பெரிய கம்பெனிகளில் எல்லாம் வருடத்திற்கு எப்படியும் ஒரு 'காலண்டர்' போடுகிறார்கள்; அதேபோல்தான் சிலர் வருடா வருடம் குழந்தை பெறத் தவறுவதில்லை.

முதல் இரவின் முதல் அத்தியாயம் :—

அன்று இரவு நானும் மிஸ்டர் மாரனும் சேர்த்து வைக்கப்பட்டோம். முதல் இரவின் முதல் அத்தியாயம் அன்று ஆரம்பமாகியது. என்னை மறந்த அவர் இடையிடையே என் மனக்கண்முன் வந்து சென்றார். மிஸ்டர் மாரன் தந்த இன்பம், புதுச்சேலை கட்டும்போது இருக்கும் ஆனந்தத்தைபோல் இருந்தது. புதுச்சேலையால்வரும் ஆனந்தம் கட்டிய அன்றுதான் இருக்கும்! ஆனால் மனத்துக்குப் பிடித்தமான, பக்கத்துவீட்டுக்காரி கட்டியிருக்கிற, அழகானசேலை—எவ்வளவு முயன்றாலும், கிடைக்காது என்கிறபோது—வருத்தம் ஏக்கம் வருகிறதல்லவா ?

காதலும்—காமமும் (கதையில் ஒரு காதலன்)

காதலுக்கு என்ன அர்த்தம் என்று எனக்குத்தெரியவில்லை. ஆனால், நான் அறிந்தவரை காதல் என்பது

ஆசையை அடிப்படையாகக் கொண்ட அன்புதான் காமமும் அதைச் சேர்ந்ததுதான். காமத்திற்கும் காதலுக்கும் பிரமாதமான வித்தியாசம் ஒன்றும் கிடையாது. டெம்பரவரி, ஆசைக்குப் பெயர் காமம்! 'பெர்மனென்ட' ஆசைக்குப் பெயர் காதல்.

தென்னாட்டின்பெருமை :—

வடநாட்டில் கங்கையும் யமுனையும் இருந்தும் பாலைவனம் இருக்கக் காண்கிறோம். ஆனால் தென்னாட்டில் காவேரி, கோதாவரி, தாமிரபரணி இருந்தும் பாலைவனமில்லை. எங்குபார்த்தாலும் பச்சைப்பசேலென்ற செழிப்பைக்காண்கிறோம் பஞ்ச உலோகமும், பக்குவமான ஜீவப்பொருள்களும் தென்னாட்டில் தாராளமாய் கிடைக்கக்காண்கிறோம். தென்னாட்டினர் திரைகடலோடி விளைபொருள்களை மேலை நாட்டினருக்குத் தராவிட்டால் மேலைநாட்டினர் வாழ்க்கை வறண்டுவிடும் நிலையில்தென்னாட்டில் வியாபாரம் இருப்பதைக்காண்கிறோம். எந்தநாட்டிற்குமில்லாத எண்ணற்ற துறைமுகங்கள் தென்னாட்டில் இருக்கின்றன. குமரிமுனையின் கடற்காற்று குமுறிய எண்ணங்களை அப்படியே ஆழ்த்தி அமைதியை அளிப்பதாய்இருக்கிறது.

கற்பனை :—

கப்பலில் எனக்குத் தூக்கம் பிடிக்கவேயில்லை. ஏக்கம் இருக்கும்போது தூக்கம் பிடிக்குமா? கப்பலின் மேல் தட்டுக்குச் சென்றேன். கடற்காற்று 'ஜிலு ஜிலு' என்று வீசியது. அந்தநேரம் மாத்திரம் என் குமுதம் கூட இருந்தால்....? கப்பலை முட்டி முட்டி முத்தமிட்டுச்செல்லும் அலைகளின் லீலைகளைப் பற்றி அவளுக்கு எடுத்துச் சொல்வேன். அவளும் அந்தலீலைகளைக்கடலுக்குள் ஒளிந்து கொண்டு 'சந்திரன்பார்ப்பதைப் பாருங்கள்' என்று சுட்டிக் காண்பிப்பாள். 'அலைகளுக்கு அதைப்பற்றிக் கவலை இல்லை' என்று நான்கூறுவேன் 'அலைகளுக்கு இல்லாமல் இருக்கலாம். ஆனால் அதோபாருங்கள், மேகலாதேவிக்கு அந்தக்கவலை இருக்கிறது. அதனால்தான் அந்தச் சந்திரனைப்பிடித்து இழுத்துக்கொண்டாள்' என்று கூறு

வாள். 'அப்படியானல் இனி அச்சமின்றி அலைகள் கொஞ்சலாமல்லவா? என்று கேட்பேன் அலைகள் கொஞ்சலாம் ஆனல்' என்று நீட்டுவாள். கட்டிப்பிடித்து நீட்டலுக்கு விளக்கம் கேட்பேன். 'இது கண்ணுறங்கும் இடமல்ல, கப்பலின் மேல்தட்டு' என்பாள். அப்புறந்தான் எனக்குச்சுய உணர்வு வரும். இப்படியே அந்த இரவு இன்பமயமாகக் கழியும்.

வாழ்க்கைத்துணை :—

பெண்கள் தனித்து வாழ முடியாதா? வல்லூறுகள் வாழும் வையகத்தில் புறுக்களுக்குச்சுதந்திரம் ஏது? வட்டமிடும் பருந்து, குறிபார்த்துத்திரியும் வேடன் இவைகளுக்கு மத்தியில் மாதர்கள் மானத்தோடு வாழவேண்டுமானல், துணை தேவை.

சிம்சனும் சிம்மாசனமும் :—

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் இளவரசராக இருந்தவர் எட்டாவது எட்வர்ட். அவர் பட்டத்தை உதறித்தள்ளிவிட்டார். ஏன் தெரியுமா? சிம்சன் என்ற சாதாரணப் பெண்ணைக் காதலித்தார். அவளையே திருமணம் செய்துகொள்வதாய் இருந்தால் பட்டம்கிடையாது எனப்பார்லிமெண்ட் கூறியது. அந்தச் சீர்திருத்த வாதி என்ன செய்தார் தெரியுமா? சிற்றத்திற்கும் தூற்றலுக்கும் பயந்து சிம்சனை விட்டுச் சென்றுரா? இல்லவே இல்லை! சிம்மாசனம் வேண்டாம்! சிம்சன்தான் வேண்டும் என்று கூறி, சிம்சனையே மணம்புரிந்து மகிழ்ந்தார்.

பகுத்தறிவுக்கழகம் :—

பார்ப்பனீயத்தை எதிர்க்கும் பலவகை ஜாதியினருக்கு ஒரு பொதுப்பெயர் தேவைப்பட்டது. 'சிகப்பு நிறத்துக்கு எதிர்நிறமாக இருப்பது கருப்போ, வெள்ளையோ, பச்சையோ அல்ல, சிகப்பு அல்லாததுதான். அதைப்போலவே, பார்ப்பனர்களுக்கு எதிரான ஜாதி முதலியார், செட்டியார் என்பதல்ல, பார்ப்பனர் அல்லாதார் என்பதுதான், எனவேதான் "பார்ப்பனர் அல்லாதார் கட்சி" என்ற பெயரோடு பகுத்தறிவுக்கழகம் வேலை செய்தது.

சிந்தனைக்கு :—

வாழ்க்கை :—

வாழ்க்கை என்பது கண்ணாடி டம்ளரல்ல; கீழே விழுந்ததும் உடைந்து உதவாமல் போவதற்கு. அது ஓர் செப்புப்பாத்திரம்; விழுந்தாலும் விவேகமாக நடந்து கொண்டால் நெளிசலை எடுப்பது கஷ்டமல்ல.

* * *

திருமணம் என்பது இல்வாழ்க்கையின் ஆரம்பமா?

* * *

கவலை என்பது காலனை அழைக்கும் கைகாட்டி மரமா?

* * *

காதல் என்பது குபேர குடும்பத்தின் அகாரதியில் மட்டும் உள்ள ஓர் அழகான வார்த்தையா?

* * *

கலப்புமணத்தில் பிறக்கும் குழந்தை எல்லையற்ற அழகுடன் இருக்குமா?

* * *

பார்வையில் பழுதில்லாமல் இருந்தால் பார்க்கிற பொருளெல்லாம் பேதமில்லாமல் தெரியத்தானே செய்யும். காதலும் அப்படியா ?

* * *

இன்பத்தின் ஆரம்பம்தானே துன்பம்? கலங்காத உள்ளம் கொண்டிருந்தால் யார் என்ன செய்ய முடியும் ?

* * *

காதல்........மின்னலில் தோன்றிய காளானைப் போன்றதா ? இல்லை, ஒளியில் தெரியும் நிழல் போன்றதா?

* * *

மானமுள்ளவன் மண்டியிட்டு வாழலாமா ? அடுத்தவன் காலில் விழுந்து வாழ்வதைவிட, தன்காலிலேயே நின்று மாளுவது மேல் அல்லவா ?

* * *

இம் மண்ணுலகம் கணத்துக்குக்கணம் கதிரவனின் கருணைக்காகக் காத்திருப்பதுபோல் ஒவ்வொரு ஆணும் பெண்ணின் பிரேமைக்காக காத்திருக்கிறன் !

ஆனல் பெண்——?

கதிரவன் இம்மண்ணுலகத்தைக் காதலிப்பதுபோல் ஒவ்வொரு பெண்ணும் ஆணைக் காதலிக்கத்தான் செய்கிருள் !

கதிரவன் எப்படி ஒரே இடத்தில் இருக்கிறதோ, அதேபோல் தான் ஆண்களிடத்திலே பெண்கள் நடந்து கொள்கிறார்கள். இது இயற்கை.

ஆனால் ஆண்கள் அப்படியில்லை! எப்படி இந்த மண்ணுலகம் கதிரவனைச்சுற்றி வருகிறதோ, அதேபோல்தான் ஒவ்வொரு காதலனும் தன் காதலியைச் சுற்றித்திரிகிறான். அல்லவா?

*　　　*　　　*

பசுவேடத்தில் உள்ள புலியை பசுவென நம்பலாமா?

காதலி :—

எனக்கு அவரைப் பார்ப்பது என்றால் கொளுத்தும் கோடையில் வீசும் குளிர்ந்த தென்றலைப் போலத்தான் இருக்கும்.

*　　　*　　　*

ஏக்கமும் துக்கமும் இரட்டைக் குழந்தைகள் சேர்ந்தே வாழ்வார்கள். ஆனால் ஏக்கமும் தூக்கமும்? இரு துருவங்கள். எப்படிச் சேரமுடியும்?

*　　　*　　　*

பயங்கரவாழ்வு என்ற அட்டைப் படத்தில் ஒரு யுவன் மீது ஒரு யுவதி சாய்ந்திருந்தாள்! இந்தப் படத்தைப்பார்த்து "நானும் சாய்ந்து விடுவேன்" என்று என்

அம்மா நினைத்தார்கள் போல இருக்கிறது. இல்லாவிட்டால் திட்டவேண்டிய அவசியமில்லை! நான் என்ன சிறு குழந்தையா கண்ணுடிக்கும் காக்காபொன்னுக்கும் வித்தியாசம் தெரியாமல் இருக்க? மேல் நாடுகளில் வாழ்க்கைக்குரிய பாடதிட்டமாக இருக்கிற பகுதிகள் எல்லாம் இங்கு இருட்டறைப் போதனையாக இருக்கிறது அல்லவா?

* * *

அறம் வளர்க! அறிவு ஓங்குக!

52

விரிய விருத்தி லேகி[...]

எவ்வித காரணத்தாலேனும் சரியே[...] புருஷர்கள் இழந்துபோன தேக வலுவை[...] சுரோணித போஷாப்பையும் திரும்பவும் பெ[...]னால், இந்த மகா **ஔஷதத்தையே** உட்கொள்ள[...]டும். இதில் சுக்கில சோணிதப் போஷாப்பிற்கு உரிய ஜீவாதாரமான **பெருமருந்துகள்** சேர்ந்திருக்கின்றன. இவ் **வீரிய விருத்தி லேகியத்தை** காலை மாலை 40-நாட்கள் ஸ்திரி அல்லது ஒரு புருஷன் சேவித்தால், அன்னாருடைய சரீரம் முற்றிலும் மாறி, சுந்தர தேகம் பெறுவார்கள். எந்த மருந்தினாலும் தீராத துரித ஸ்கலிதம் சொப்பன ஸ்கலிதம் நீங்கி நீடித்த இன்பம் எய்துவார்கள். பேடித்தனம் போய் ஆண்மை உண்டாகும். தளர்ந்து துவண்டு மெதுவுபட்ட உறுப்புக்கள் முறுக்கேறி பலப்படும். தளர்ந்து-ஒய்ந்த நடை மாறி கம்பீர நடை ஏற்படும். சோம்பல் நீங்கி சுறு சுறுப்பு உண்டாகும் அவரவர்களின் அந்தரங்க பலக்குறைவு காரணமாக, தம்பதிகளுள் ஏற்படும் மனகசப்பு, வெறுப்பு, முகச்சுளிப்பு, முதலியன நீங்கி சந்தோஷத்தாண்டவம் குடிகொள்ளும். ஜல ரூபமாய் மாறிப்போன சுக்கில சோணிதம், பிசின் ரூபமாக கெட்டிப்படும். இன்பத்திற்கு இணங்கியதும், கோழியைப் போல் அதிசீக்கிரம் ஸ்கலிதத்திற்கு உள்ளாகி மனம் வருந்தும் மக்களுக்கு இஷ்டப்படி அனுபவிக்கும் ஆற்றலை அளிக்கும். பலம், **புஷ்டி, வீரியம், தேஜஸ், ஞாபகசக்தி, ஆரோக்கியம், முதலியன அதிகரிக்கும்**

20-நாள் சாப்பிடக்கூடிய லேகியம் டப்பி 1-க்கு ரூ. 3-0-0
பாக்கிங், தபால் சார்ஜ் மணி ஆர்டர் கமிஷன் அணா 0-14-0
40-நாள் சாப்பிடக்கூடிய லேகியம் டப்பி 1-க்கு ரூ. 6-0-0

பாக்கிங் சார்ஜ், தபால் சார்ஜ் மட்டிலும் ரூபா 1-4-0
ஒரே தடவையில் 40-நாள் லேகியம் வாங்குவோருக்கு, தபால் சார்ஜ், பாக்கிங் சார்ஜ், இல்லாமல் ரூபா 6-4-0-க்கு அனுப்பப்படும்.

M. V. ஆனந்தன்

17, தாண்டவராய பிள்ளை தெரு,
சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்-1